**செய்தி வெளியீடு எண்: 390** **நாள்:26.5.08**

**தேசிய சமுதாய நல்லிணக்க விருதுகள் 2008**

மத்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய சமுதாய நல்லிணக்க அமைப்பு, 2008–ஆம் ஆண்டிற்கான தேசிய சமுதாய நல்லிணக்க விருதுகள் வழங்க நமது மாநிலத்திலிருந்து தகுதியான விண்ணப்பங்கள் அனுப்பக் கோரியுள்ளது.

இந்த அமைப்பு, தனிநபர் ஒருவருக்காகவும், ஓர் அமைப்பு, மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் உட்பட பல்கலைக்கழகம் ஒன்றில் செயல்படுகிற ஒரு மாணவர் பேரவை ஆகியவற்றுக்காகவும் ஒன்று வீதம் மூன்று “தேசிய சமுதாய நல்லிணக்க விருதுகளை” ஏற்படுத்தியுள்ளது. இந்த விருதுகள் நீண்டகால அளவில் நல்லிணக்கத்தை அல்லது தேசிய ஒருமைப்பாட்டை அல்லது அவ்விரண்டையும் வளர்ப்பதற்காக, மெச்சத்தகுந்த வகையில் பங்குபணியாற்றுவோருக்கு, ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

ஒரு தனிநபர் (ஆண்/பெண்), தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமுதாய நல்லிணக்கத் துறையில், குறைந்தது 10 ஆண்டுகள் கால அளவிற்குப் பணிபுரிந்திருக்கவேண்டும் மற்றும் 35 வயதுக்கு மேற்பட்டவராகவும், அரசு பணி மற்றும் நாடாளுமன்றம்/சட்டமன்றம்/உள்ளாட்சி மன்றம்/அரசியல் கட்சிகளில் உறுப்பினராக இல்லாமலிருக்கவேண்டும்

அமைப்பு ஒன்றைப் பொறுத்தவரையில், அந்த அமைப்பு, நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்ட மன்றத்தின் உரிய சட்டம் ஒன்றின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றம் சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் செயல்பட்டிருக்க வேண்டும்.

பல்கலைக் கழகங்களில்/நிகர்நிலை பல்கலைக் கழகங்களில் செயல்படுகிற மாணவர் பேரவை சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தின் துணை வேந்தர்/தலைவர் விருதுக்கான செயற்குறிப்பை பரிந்துரைக்கவேண்டும் மற்றும் சமுதாய நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுத் துறையில் குறைந்தது ஐந்தாண்டுகள் கால அளவில் தொடர்ச்சியான அடிப்படையில், மெச்சத் தகுந்த வகையில் செயலாற்றிய பெருமையை அது பெற்றிருக்கவேண்டும்

ஒவ்வோராண்டும் ஜனவரி மாதம் 26 ஆம் நாளன்று தேசிய சமுதாய நல்லிணக்க அமைப்பு ஏற்பாடு செய்யும் விழாவில் விருதுகள் வழங்கப்படும்.

எனவே தகுதியுடையவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் மற்றும் சென்னை மாவட்டத்தைப் பொருத்தவரையில் சென்னை காவல் துறை ஆணையாளர் அவர்களிடமும் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து 10.6.2008–க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு 30.6.2008–க்குள் மத்திய அரசுக்கு அனுப்பப்படவேண்டும்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**